பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 08 2024 **FRIDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும், தொழில்நுட்ப பரிமாற்றங்களை மேம்படுத்தவும் அறிவுசார் பாதுகாப்பு வலுவாக அமைவது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. **SSLV-D3** ராக்கெட் மூலம் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள், **EOS-08** ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

3. தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டிணத்தில் அமைக்கப்பட்டு வரும் விண்வெளி ஆய்வு மையம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் செயல்பாட்டுக்கு வரும் என்று இஸ்ரோ தலைவர் திரு. சோம்நாத் தெரிவித்துள்ளார்.

4. நாகை - இலங்கை காங்கேசன்துறை இடையேயான பயணியர் கப்பல் சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

5. ஆஸ்திரேலியா 'ஏ' மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 219 ரன் வெற்றி இலக்கை இந்திய 'ஏ' அணி நிர்ணயித்துள்ளது.

>>>>>><<<<<<

பாரம்பரிய அறிவை பாதுகாப்பதில் அறிவுசார் சொத்துரிமை சட்டம் மற்றும் மேலாண்மை முக்கியப் பங்கு வகிப்கதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் அறிவுசார் சட்டம் மற்றும் மேலாண்மை படிப்புக்கான தொடக்க நிகழ்ச்சியில் இன்று அவர் கலந்து கொண்டு பேசினார்.

அறிவுசார் சொத்துரிமையின் தங்கச்சுரங்கமாக இந்தியா விளங்குவதாகவும், நாட்டின் கலாச்சார மற்றும் வரலாற்று பாரம்பரியம் அதற்கு காரணமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும், தொழில்நுட்ப பரிமாற்றங்களை மேம்படுத்தவும் அறிவுசார் பாதுகாப்பு வலுவாக அமைவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச வர்த்தகத்தில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும‌ அவர் தெரிவித்தார்.

புதுமையான கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, ஆக்கபூர்வமான முயற்சிகளை பாதுகாத்தல் போன்றவற்றிற்கு அறிவுசார் சொத்துரிமை, சட்டம் மற்றும் மேலாண்மை வித்திடுகிறது என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் கூறினார்.

>>>>>><<<<<<

இஸ்ரோவின் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் **EOS-08, SSLV-D3** ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து இன்று காலை 9.17 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இதனுடன் மூன்று சிறிய ரக **SR-O** செயற்கை கோள்களும் விண்ணில் செலுத்தப்பட்டன.

13 நிமிடத்தில் புவியிலிருந்து 475 கிலோமீட்டர் தொலைவில் உள்ள குறைந்த புவிவட்ட சுற்றுப்பாதையில் இந்த செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட்டன.

இதன்மூலமாக மிகச் சிறிய மற்றும் குறு செயற்கை கோள்களை விண்ணில் செலுத்த முடியும் என்று நிரூபணமாகியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பேரிடர் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் ஆய்வு, காட்டுத் தீ, அணுஉலை விபத்துகள் போன்றவை குறித்த துல்லியமான விவரங்களை **EOS-08** செயற்கைக்கோள் பூமிக்கு அனுப்பும். இதுகுறித்த அதிநவீன புகைப்படங்களையும் இந்த செயற்கைக் கோள் அனுப்பும்.

இமயமலை பகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள், கடல்மட்டத்திற்கு மேல் நிலவும் பருவநிலை மாற்றங்கள், பெருவெள்ளம், நதிகளின் வெள்ளப்பெருக்கு போன்றவை குறித்த விவரங்களும் இந்த செயற்கைக்கோள்கள் மூலம் கிடைக்கும்.

இஸ்ரோவின் இந்த தொழில்நுட்பம், வர்த்தக பயன்பாட்டிற்காக தொழில்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும், இதன் மூலம் கிடைக்கும் வருமானம் விண்வெளித்துறைக்கு பயன்படும் என்றும் இஸ்ரோ தலைவர் திரு. சோம்நாத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஹரிகோட்டாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டிணத்தில் அமைக்கப்பட்டு வரும் விண்வெளி ஆய்வு மையம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் செயல்பாட்டுக்கு வரும் என்று கூறினார்..

அங்கிருந்து சிறிய வகை செயற்கை கோள் செலுத்து வாகனங்களை அனுப்ப முடியும் என்றும், இந்தியாவின் தெற்குப் பகுதியில் இலங்கை இருப்பதை கருத்தில் கொண்டு, தேவையின் அடிப்படையில் அங்கிருந்து செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மனிதர்களை விண்ணிற்கு அனுப்பும் ககன்யான் விண்கலம் ஏவப்படுவதற்கு முன்பாக, வரும் டிசம்பரில் ஆளில்லாத ககன்யான் விண்கலம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அவர், பல கட்ட பரிசோதனைகளுக்குப் பின்னர், மனிதர்களை விண்ணிற்கு அனுப்பும் பணி மேற்கொள்ளப்படும் என்றார்.

முதல்கட்டமாக விண்ணில் செல்பவர்களுக்கு ஏற்படும் ஊதா நிற கதிர்வீச்சு மற்றும் விண்ணில் உள்ள பொருட்களால் ஏற்படும் கதிர்வீச்சுகளை ஆய்வு செய்து, அதிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்படும் என்றும் திரு. சோம்நாத் தெரிவித்தார்.

**Spacekidz India** நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் எமது செய்தியாளருக்கு அளித்த சிறப்பு பேட்டியில், இந்தியாவின் விண்வெளி ஆய்வுத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளும் உலக அரங்கில் நாட்டிற்கு அசைக்கமுடியாத இடத்தை பெற்று தந்திருப்பதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - ஸ்ரீமதி 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மறைந்த முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி-ன் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, புதுதில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா, மாநிலங்களவை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஸ் நாராயணன் சிங் உள்ளிட்டோர் அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசத்தை கட்டமைப்பதில் அடல் பிஹாரி வாஜ்பேயின் பங்களிப்பு ஈடுஇணையற்றது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் சிறப்பான வாழ்வை பெற்றிட வேண்டும் என்று அவர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாகை - இலங்கை காங்கேசன்துறை இடையேயான பயணியர் கப்பல் சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

கடந்த அக்டோபர் மாதம் பிரதமர் திரு. நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட இச்சேவை, காலநிலை மாற்றம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், இன்று மீண்டும் தொடங்கியுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிடும் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், தமிழகத்திற்கான போதிய நிதிப் பகிர்வை மத்திய அரசு வழங்காமல் இருப்பதாக கண்டனம் தெரிவித்தும் அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

>>>>>><<<<<<

மின்கட்டண உயர்வை தமிழக அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

>>>>>><<<<<<

கொல்கத்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பயிற்சி பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் உரிய நீதி கிடைக்க வேண்டும் என்று இந்திய தோல் மருத்துவர்கள் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அந்த அமைப்பு எழுதியுள்ள கடிதத்தில் இதனை குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், நாடுமுழுவதும் உள்ள மருத்துவமனைகளில் இன்று காலை 6 மணி முதல் 24 மணி நேரத்திற்கு, புறநோயாளிகள் சேவையை புறக்கணிப்பதாகவும், குறிப்பிட்ட சில அறுவை சிகிச்சைகள் நடைபெறாது என்றும் இந்திய மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

எனினும், அவசர சிகிச்சைப் பிரிவு சேவைகள் தொடரும் என்றும் அது கூறியுள்ளது.

இதற்கிடையே, இந்த வழக்கு தொடர்பாக 19 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கொல்கத்தாவில் உள்ள அந்த மருத்துவமனையின் கண்காணிப்பாளரிடம் சிபிஐ இன்று விசாரணை நடத்தியது.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீர், ஹரியானா சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் தேதி இன்று அறிவிக்கப்படுகிறது.

இன்று மாலை3 மணியளவில் தேர்தல் ஆணையம் இதற்கான அட்டவணையை வெளியிடுகிறது.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத செயல்பாடுகளை தடுக்கும் நோக்கில், அங்குள்ள எட்டு மாவட்டங்களில் 19 சிறப்பு படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பீர் பாஞ்சல், ஜெனாப் பகுதிகளில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் செயல்படும் இப்படையினருக்கு நவீன பயிற்சிகளும் உபகரங்களும் வழங்கப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு மட்டுமல்லாமல் சட்டம் ஒழுங்கு தொடர்பான நடவடிக்கைகளிலும் இக்குழுவினர் கவனம் செலுத்துவார்கள் என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியா ‘ஏ’ மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 219 ரன் வெற்றி இலக்கை இந்திய ‘ஏ’ அணி நிர்ணயித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெக்கே நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய ‘ஏ’ அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

பின்னர் களமிறங்கிய இந்திய ‘ஏ’ அணி 48 ஓவரில் 218 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<